தமிழும் நாமும்

1.
தமிழர்கள் உலகெங்கும் பரந்து வாழ்கிறார்கள். இலங்கையில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களாகும்.
வட மாகாணம் யாழ்ப்பாணம் , மன்னார், கிளிநொச்சி,முல்லைத்தீவு,வவுனியா மாவட்டங்களையும்
கிழக்கு மாகாணம் திரிகோணமலை,மட்டக்களப்பு,அம்பாறை மாவட்டங்களையும் உள்ளடக்கிறது.
இதைவிட மேல்மாகாண,மத்திமாகாண பகுதிகளிலும் தமிழர்கள் செறிந்து வாழ்கிறார்கள்.

2.
உலகிலேயே தமிழ்கள் மிக அதிகமாக வாழும் இடம் இந்தியாவில் உள்ள தமிழ் நாடாகும். ஏறக்குறைய ஏழு கோடி (அதாவது 70 மில்லியன்) தமிழ்கள் இங்கு வாழ்கிறார்கள். தமிழ் நாடு எமக்கு திருவள்ளுவர் , ஔவையார், பாரதியார் ,கம்பன் , இளங்கோ போன்ற பல்லாயிரம் தமிழ் அறிஞர்களை தந்திருக்கிறது. சென்னை,மதுரை, திருச்சி என்பன தமிழ் நாட்டின் சில முக்கிய நகரங்களாகும்.

3.
**பழமொழிகள்:**
எம்முன்னோர் தம் வாழ்வில் பெற்ற பட்டறிவு வாயிலாகக் கண்டறிந்த உண்மைகளை அழகுறச் சுருக்கமாகப் பொருள் பொதிந்ததாக ஆக்கிக் கூறியுள்ளனர். அவர்கள் கூறிய பழமையும், பொருட்செறிவும் பொருந்திய அம்மொழிகள் பழமொழிகள் என்றும், முதுமொழிகள் என்றும் கூறப்படுகின்றன.
இப்போது ஒரு சில பழமொழிகளைப் பார்ப்போம்.
அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. இது ஒற்றுமையின் வலிமையை சொல்கிறது.
அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். இது விடாமுயற்சியை எடுத்துச் சொல்கிறது.
இளமையிற் கல்வி சிலையில் எழுத்து. இது உரிய நேரத்தில் உரியவற்றை செய்யவேண்டும்
என்பதை எடுத்துச் சொல்கிறது.

4.
**ஈழத்துத் தமிழ்ப் புலவர்கள்**
தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் ஈழத்துத் தமிழ்ப் புலவர்கள் ஆற்றிய பணி அளப்பரியன. அவர்களுள், ஆறுமுக நாவலர் , விபுலானந்த அடிகளார் , சி.வை.தாமோதரம் பிள்ளை ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.
**ஆறுமுக நாவலர்** :
தமிழ் வாழப் பணிபுரிவதே தன் வாழ்வின் குறிக்கோள் என வாழ்ந்தவர் ஆறுமுக நாவலர். இவர் யாழ்ப்பாணத்திலுள்ள நல்லூரில் 1822ம் ஆண்டு பிறந்தார். அவர் பல நூல்களை இயற்றியுள்ளார். விவிலிய நூலிற்கு (அதாவது Bible ற்கு) மொழிபெயர்ப்பு செய்தது, திருக்குறள் பரிமேலழகர் உரையை முதலில் பதிப்பித்தது அவருடைய பெருமைக்கு சான்று பகர்வன.

**சுவாமி விபுலானந்த அடிகளார்**
விபுலானந்த அடிகளார் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காரைதீவின் காரேறு மூதூரில் 1892ம் ஆண்டு பிறந்தார். இவரது இளமைப் பெயர் மயில்வாகனன். தமிழ் இலக்கிய இலக்கணங்களை தெளிவுறக் கற்ற இவர், கவிதை இயற்றும் திறனை தனது 12 ஆவது வயதிலேயே பெற்றிருந்தார். மொழித்துறையில் மட்டுமல்லாமல் விஞ்ஞானத்துறையிலும் தனது திறமையை வெளிக்காட்டினார். 1924ம் ஆண்டு சுவாமி சிவானந்தர் ஞான உபதேசம் அருள சுவாமி விபுலானந்தர் என்ற திருப்பெயர் பெற்றார். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் இருக்கும் வரை முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் திருநாமமும் வாழ்ந்து கொண்டே இருக்கும்.

5.
**செம்மொழி**
செம்மொழி என்பதன் பொருள் ஒரு மொழியின் இலக்கியப்பழமை என்பதே ஆகும். செம்மொழியாக ஒரு மொழியைத்தெரிவு செய்ய அதன் இலக்கியப் படைப்புகள் வளம் மிகுந்ததாகவும் பழமையானதாகவும், அதன் தோன்றல் ஏனைய மொழிகளில் சாராதிருத்தலும் வேண்டும்.
எமது தாய்மொழியான தமிழிற்கு மேற்கூறிய தகுதிகள் அனைத்தும் இருப்பதால், தமிழ் செம்மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே நாங்கள் தமிழைக் கற்று இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் நிலைத்து வாழ வழிவகுக்க வேண்டும்.

6.
**வீரமாமுனிவர்**
வீரமாமுனிவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். இவரது இயற்பெயர் **Constantine Joseph Beschi** என்பதாகும். இவர் 1710ம் ஆண்டு தமிழ் நாட்டிற்கு வந்தார். தமிழை மிக ஆர்வத்துடன் கற்ற இவர் தனது பெயரை வீரமாமுனிவர் என மாற்றிக் கொண்டார். இவர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் சிறப்பான பணிகளைச் செய்துள்ளார். அவர் தமிழில் "தேம்பாவாணி" எனும் பெருங்காப்பியத்தை இயற்றினார். மேலும் திருக்குறளில் அறத்துப்பாலையும், பொருட்பாலையும் இலத்தீன் **(Latin)** மொழிக்கு மொழிபெயர்த்தார். இதன் மூலம் ஐரோப்பியர் திருக்குறளின் பெருமையை அறிய வைத்தார்.

7.

## பாரதிதாசன்

பாரதிதாசன் 1981ம் ஆண்டு புதுச்சேரியில் பிறந்த பெரும் புகழ் படைத்த பாவலர். இவருடைய இயற்பெயர் சுப்புரத்தினம். தமிழ் ஆசிரியராகப் பணியாற்றிய இவர் பாரதியார் மீது கொண்ட பற்றுதலால் பாரதிதாசன் என்று தம் பெயரை மாற்றிக்கொண்டார். இவர் தன் எழுச்சி மிக்க எழுத்தால் புரட்சிக் கவிஞர் என்றும் பாவேந்தர் என்றும் அழைக்கப்பட்டார்.

பாரதிதாசன் எழுதிய புகழ் பெற்ற வரிகள் சில:

“தமிழுக்கு அமுதென்று பேர் - அந்த
தமிழின்ப தமிழெங்கள் உயிருக்கு நேர்”

“புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்”

8.

## தைப்பொங்கல்

தமிழர்கள் சூரியனையும் சந்திரனையும் அடியாகக் கொண்டே தங்களது வாழ்வியலையும் அறிவியலையும் அமைத்துக் கொண்டார்கள். அவ்வகையில் சூரியனை அடிப்படையாகக் கொண்ட இயற்கையின் இயக்கத்தில் எல்லா வளங்களும் நிறைந்த காலமாக தை மாதம் திகழ்கிறது. தை மாதத்தின் முதல் நாளன்று தமிழரின் திருநாளான தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. இது உழவரின் திருநாள் என்றும் அழைக்கப்படும். உலகில் கொண்டாடப்படும் பல்லின பண்பாட்டு விழாக்களிலே உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்ட திருநாள் தைப்பொங்கல் என்று காணுவதில் பெருமை கொள்வோம்.

9.

## ஐம்பெருங் காப்பியங்கள்

முற்காலத்தில் தமிழில் எழுதப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலேகசி, வளையாபதி, சீவகசிந்தாமணி என்னும் காப்பியங்கள் ஒருங்கே ஐம்பெருங் காப்பியங்கள் என அறியப்படுகின்றன.

### சிலப்பதிகாரம்

சேரநாட்டவரான இளங்கோ அடிகளால், கி.பி. இரண்டாம்நூற்றாண்டளவில் எழுதப்பட்டது. கோவலன் என்னும்வணிகனதும், அவனது மனைவியாகிய கண்ணகியினதும் கதையக்கூறுவேத இக்காப்பியமாகும்.

மணிமேகைல
ஐம்பெரும் தமிழ் காப்பியங்களுள் ஒன்று. இக்காப்பியத்தைஇயற்றியவர் சீத்தைலச்சாத்தனார்.
குண்டலேகசி
என்னும் நூல் ஒரு பௌத்தம் சார்ந்தநூலாகும்
வளையாபதி
ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் இது சமண சமயம் சார்ந்த ஒருநூல்.
சீவகசிந்தாமணி இதை திருத்தக்க தேவர் என்ற சமணப்புலவர் இயற்றியுள்ளார்

10.

## மூவேந்தர்கள்

மூவேந்தர்கள் என்பவர்கள் பண்டைய தமிழகத்தை ஆண்ட சேர, சோழ, பாண்டிய மன்னர்கைளக் குறிக்கும். இவர்களில் சேரர்கள் கேரள, தமிழகத்தின் மேற்குப் பகுதிகளை ஆண்டனர். சோழர்கள் திருச்சி, தஞ்சை பகுதிகளையும் , பாண்டியர்கள் மதுரைப் பகுதிகளையும் ஆட்சி செய்தனர்.

சேரர் பண்டைத் தமிழகத்தில் புகழ் பெற்று விளங்கிய மூன்று நாடுகளுள் ஒன்றாகத் தமிழகத்தின் மேற்குக் கரையில் அமைந்திருந்த சேர நாட்டை ஆண்ட அரசவழியினரைச் சார்ந்தவர்களே சேரர்கள் எனப்படுகிறார்கள். சேரர்களின் கொடி விற்கொடி ஆகும்.

சோழர் குலம் வளம் பொருந்திய காவிரி ஆற்றுப் படுகைப் பகுதியிலேயே தோற்றம் பெற்றது. இவர்களுடைய எல்லை வடக்கே ஒரிசா வரையிலும் கிழக்கில் ஜாவா, சுமத்ரா, மலேசியா வரையும், தெற்கே மாலைத்தீவுகள் வரையிலும் விரிந்து இருந்தது. சோழர்களின் கொடி புலிக்கொடி.

பாண்டியர்கள் மதுரை, திருநெல்வேலி, மற்றும் தற்போதைய கேரளத்தின் தென்பகுதி ஆகியவற்றை ஆட்சி செய்தனர். பாண்டியர்களின் கொடி மீன் கொடியாகும்.

11.
இலங்கையை ஆண்ட தமிழ் மன்னர்கள்

இவர்களில் எல்லாளன், சங்கிலியன், பண்டார வன்னியன் ஆகியோர் முக்கியமானவர்களாக கருதப்படுகின்றனர்.

**எல்லாளன்** 44 ஆண்டுகள் அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு இலங்கைய ஆட்சிசெய்த தமிழ் மன்னனாவான். எல்லாளன் பகைவர்க்கும் நண்பர்க்கும் சமநீதி வழங்கியதாக கூறும் மகாவம்சம், அவனது நீதிநெறிதவறாத ஆட்சியை மனுநீதிச்சோழனின் கதைகளோடு இணைத்து விபரித்துள்ளது.

**சங்கிலியன்** அல்லது சங்கிலி என்பவன் பதினாறாம் நூற்றாண்டில் யாழ்ப்பாண
அரசை ஆண்ட அரசன் ஆவான். சங்கிலி மன்னனின் அரண்மனை வாயில் சங்கிலித்தோப்பு இன்றும் யாழ்ப்பணத்தில் உள்ள நல்லூரில் அழியாமல் இருக்கிறது. இதற்கு அருகாமையில் சஙிலியனின் சிலை ஒன்றும் உள்ளது.

**பண்டாரவன்னியன்**:
பண்டாரவன்னியன் வன்னிப் பிரதேசத்தினை ஆட்சி செய்த மன்னர்களில் ஒருவர். இவரது வீரத்தை மதித்து ஆங்கிலேயர் கற்சிலைமடு என்னும் இடத்தில் அவருக்கு ஒரு நினைவுக்கல் நாட்டினார்கள். இது 1803ம் ஆண்டு நாட்டடப்பபட்டது. இன்று உடைக்கப் பட்டுவிட்டது.

12.

முத்தமிழ்
இயல் (இயற்தமிழ்), இசை (இசைத்தமிழ்), நாடகம் (நாடகத்தமிழ்) ஆகிய
மூன்றையும் தமிழ் மொழியின் இணையான கூறுகளாக முத்தமிழ் என்ற கருத்துக்
கோட்பாடு வெளிப்படுத்தி நிற்கின்றது. இம்மூன்றுக்கும் தமிழர்கள் தந்த
முக்கியத்துவத்தை முத்தமிழ் வெளிப்படுத்தி நிற்கின்றது. மொழியை
இசையுடனும், நாடகத்துடனும் இணைத்துப் பார்க்கும் கண்ணோட்டம் பிற
மொழிகளில் காணப்படாத சிறப்பு எனலாம்.

13.

**தமிழ் இலக்கணம்** பற்றி கூறப்போகிறேன்:

தமிழ் மொழி, இயற்றமிழ், இசைத்தமிழ் மற்றும் நாடகத் தமிழ் என மூன்று பிரிவுகளை உடையது. இவையே முத்தமிழ் என அழைக்கப்படக் காரணமாக விளங்குகிறது. நம் முன்னோர் முத்தமிழின் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே இலக்கணம் அமைத்தனர். அகத்தியம் முத்தமிழுக்கும் உரிய இலக்கண நூல் என்பர். இருப்பினும், பொதுவாக **தமிழ் இலக்கணம்** என்பது இயற்றமிழ் இலக்கணத்தைக் குறிப்பதாயிற்று. செய்யுள் மற்றும் உரைநடை ஆகியவற்றின் தொகுதி இயற்றமிழாகும். தொல்காப்பியம் இயற்றமிழில் கிடைத்துள்ள மிகப்பழைய இலக்கண நூலாகும். பைந்தமிழ் இலக்கணம் ஐந்து வகை. அவை,

1. எழுத்து
2. சொல்
3. பொருள்
4. யாப்பு
5. அணி

அறிஞர்கள் தமிழ் இலக்கணத்தை மூன்று இலக்கணம் என்றும் ஆறு இலக்கணம் என்றும் ஏழு இலக்கணம் என்றும் வகைப்படுத்துவர்.

14.

**நானிலம்:**

பண்டைத்தமிழர்கள் தாம் வாழும் நிலத்தை நான்காக வகுத்தனர். நிலத்தின் இயற்கை அமைவு, காலநிலை என்பவற்றின் அடிப்படையில் இப்பிரிவுகள் அமைந்திருந்தன.

அவையாவன:

குறிஞ்சி : மலையும் மலை சார்ந்த இடமும்.
முல்லை : காடும் காடு சார்ந்த இடமும்.
மருதம் : வயலும் வயல் சார்ந்த இடமும்.
நெய்தல் : கடலும் கடல் சார்ந்த இடமும்

15.

பைந்தமிழ் இலக்கணம்

பைந்தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும்.

அவை

1. எழுத்து
2. சொல்
3. பொருள்
4. யாப்பு
5. அணி என்பனவாகும்

தமிழ் எழுத்துகள்

தமிழ் எழுத்துகளை முதல் எழுத்துகள் , சார்பெழுத்துகள் என இருவகையாகப் பிரிக்கலாம்.

முதல் எழுத்துகள் : அ முதல் ஔ வரையுள்ள 12 உயிரெழுத்துகளும், 'க்' முதல் 'ன்' வரையுள்ள 18 மெய்யெழுத்துகளும் ஆகிய முப்பதும் முதலெழுத்துகள் எனப்படும். உயிரெழுத்துக்கள் குறில், நெடில் என இருண்டு வகைப்படும். மெய்யெழுத்துக்கள் வல்லினம், மெல்லினம், இடையினம் என்று மூன்று வகைப்படும்.

சார்பெழுத்துக்கள் : உயிர் மெய் இரண்டும் சார்ந்து வரல் ஆதலின் சார்பெழுத்து எனப்படும். இவற்றைவிட ஆயுதஎழுத்து ஃ ம் இருக்கிறது. இவ்வாறு, உயிர் எழுத்துகள் 12 , மெய் எழுத்துகள் 18 , உயிர்மெய் எழுத்துகள் மற்றும் ஆய்தம் ஆகிய 247 எழுத்துகளே, தமிழ் எழுத்துகள் எனப்படும்.

# சொல்

ஓர் எழுத்து தனித்து நின்றோ பல எழுத்துகள் தொடர்ந்து நின்றோ பொருள் தருவது சொல் எனப்படும்.
எடுத்துக்காட்டு :வீடு, கண், போ

சொல்லின் வகைகள்

1. பெயர்ச்சொல்
2. வினைச்சொல்
3. இடைச்சொல்
4. உரிச்சொல்

பொருள்: பொருள் இரண்டு வகைப்படும். அவை,

1. அகப்பொருள்
2. புறப்பொருள்

நம் இலக்கியங்களுக்குப் பாடுபொருள்களாக அமைவன அகப்பொருள்களும் புறப்பொருள்களும்.ஒத்த
அன்புடைய தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் காதலித்து நடத்தும் வாழ்க்கை நிகழ்ச்சிகளை விளக்கிக்கூறுவது அகப்பொருள். அறம், பொருள், வீடு ஆகிய (இன்பம்ஒழிந்த) மூன்று பேறுகளைப் பற்றியும், கல்வி, வீரம், கொடை, புகழ் முதலியன பற்றியும் கூறுவது புறப்பொருள்.

யாப்பு என்பதற்குப் புலவர்களால் செய்யப்பெறும் செய்யுள் என்பது பொருள். செய்யுள் இயற்றுதற்குரிய இலக்கணம் யாப்பிலக்கணமாகும்.
யாப்பின் உறுப்புகள் :
எழுத்து , அசை, சீர் , தளை , அடி , தொடை.
யாப்பின் அடிப்படையில் பா வகைகள்:
வெண்பா , ஆசிரியப்பா ,கலிப்பா ,வஞ்சிப்பா.

அணி என்பதற்கு அழகு என்பது பொருள். செய்யுளில் அமைந்து கிடக்கும் சொல்லழகு, பொருளழகு முதலியவற்றை வரையறுத்துக் கூறுவது அணி இலக்கணமாகும். அணி பலவகைப்படும். அவற்றுள் சில,

1. தன்மையணி
2. உவமையணி
3. உருவக அணி
4. வேற்றுமை அணி என்பனவாகும்.

16

**பண்பாடு** என்பது பரந்த பொருளுடன் பயன்படுத்தப்படும் ஒரு சொல். ஆங்கிலத்தில் *culture* என்னும் சொல்லுக்கு இணையான பொருளில் இச்சொல் தமிழில் பயன்படுத்தப்படுகிறது. கலாச்சாரம் என்ற சொல்லும் பண்பாட்டுக்கு ஒத்தசொல்லாக பயன்படுகின்றது. இது பொதுவாக மனித செயற்பாட்டுக் கோலங்களையும்; அத்தகைய செயற்பாடுகளுக்குச் சிறப்புத் தன்மைகளையும், முக்கியத்துவத்தையும் கொடுக்கும் குறியீட்டு அமைப்புக்களையும் குறிக்கின்றது.

பண்பாடு ஒரு பலக்கிய கருப்பொருள். அதற்கு பல நிலைகளில் வரையறை உண்டு. ஒரு நிலையில் பண்பாடு என்பது ஒரு குழுவின் வரலாறு, போக்குகள், பண்புகள், புரிந்துணர்வுகள், அறிவு பரம்பல்கள், வாழ்வியல் வழிமுறைகள், சமூக கட்டமைப்பு என்பனவற்றை சுட்டி நிற்க்கின்றது. மொழி, உணவு, இசை, சமய நம்பிக்கைகள், தொழில் சார் தெரிவுகள், கருவிகள் போன்றவையும் பண்பாட்டுக்குள் அடங்கும்.

## 17. கால அளவுகள்

தமிழில் கால அளவுகள் பின்வருமாறு கூறப்படுகிறது. அவையாவன,
விநாடி , நாடி , மணித்துளி , மணித்தியாலம், நாள், வாரம் , மாதம், ஆண்டு என்பனவாகும்.
வாரத்தில் ஏழு நாட்கள் உண்டு
அவையாவன:
ஞாயிறு , திங்கள் , செவ்வாய், புதன் , வியாழன், வெள்ளி , சனி என்பனவாகும்.
மாதங்கள் பன்னிரண்டாகும்:
அவையாவன:
தை , மாசி , பங்குனி, சித்திரை , வைகாசி, ஆனி , ஆடி, ஆவணி , புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி என்பனவாகும்.

18.
ஆண்டு விழாக்கள்
25 ஆண்டுகள் - வெள்ளி விழா
50 ஆண்டுகள் - பொன் விழா
60 ஆண்டுகள் - வைர விழா
75 ஆண்டுகள் - பவள விழா
100 ஆண்டுகள் - நூற்றாண்டு விழா

19.

## பருவ காலங்கள்:

**பருவகாலம்** என்பது காலநிலை, சூழலியல் மற்றும் பகலின் மணித்தியாலங்கள் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றத்தால் குறிப்பிடப்படுகின்ற வருடத்தின் பிரிவு ஆகும்.

அவுஸ்திரேலியாவில் பருவகாலங்கள் நான்கு வகையாக இருக்கிறது.
கோடை காலம் (Summer), மாரி காலம் (Winter), இலையுதிர்காலம் (Autumn) ,
வசந்தகாலம் (Spring).

20
தமிழில் மெய்யெழுத்துக்கள் 18 ஆகும். அவையாவன:
க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ்
ழ் ள் ற் ன்.
மெய்யெழுத்துக்களை மூன்று இனங்களாகப் பிரிக்கலாம்.
வல்லினம் : க் ச் ட் த் ப் ற்.
மெல்லினம் : ங் ஞ் ண் ந் ம் ன்.
இடையினம் : ய் ர் ல் வ் ழ் ள்.

21.
ஐம்புலன்கள்:

எமது உடலின் ஐம்புலன்கள் ஆவன: மெய் , வாய் , கண் , செவி , மூக்கு ஆகும்.
கண் - பார்ப்பதற்கும்
செவி - கேட்பதற்கும்
மூக்கு - சுவாசிப்பதற்கும்
வாய் - சுவைப்பதற்கும்
மெய் அதாவது உடம்பு - உணர்வதற்கும் உதவுகின்றன.

22.

## அறுசுவை:

அறுசுவை எனப்படுவது நா அறியக்கூடிய ஆறு வகை சுவைகளாகும்.
அவையாவன:
துவர்ப்பு - இரத்தத்தைப் பெருக்குகின்றது
இனிப்பு - தைசைய வளர்க்கின்றது
புளிப்பு - கொழுப்பினை வழங்குகின்றது
கார்ப்பு - எலும்புகைள வளர்க்கின்றது
கசப்பு - நரம்புகைள பலப்படுத்துகின்றது
உவர்ப்பு - உமிழ்நீரைச் சுரக்கச் செய்கின்றது
அக்கால மருத்துவங்களும், உணவு முறைகளும் இதனை அடிப்படையாகக்

கொண்டே இருந்து வந்தது.

23.

## திசைகள்:

திசைகள் எட்டு வகைப்படும் அவையாவன:
வடக்கு , கிழக்கு , மேற்கு , தெற்கு , வட கிழக்கு, தென் கிழக்கு, வட மேற்கு , தென் மேற்கு ஆகும்.

சூரியன் கிழக்கே உதித்து மேற்கே மறையும்.
பூமியின் வட , தென் துருவங்கள் மிகவும் குளிராக இருக்கும்.